முடியாது. சில கல்வி நிலையங்களிலே உள்ள நிர்வாகத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மாறுபாடு ஏற்படுமேயானால் பிரச்சினை பெரியதாகும். அது அவ்வளவு அவசிய மில்லை. சட்டமன்ற உறுப்பினர்களை எல்லோரும் மதிப் பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தனியார் கல்லூரிகளிலே ஆசிரியர் களை நியமனம் செய்யும்போது பல லட்சக் கணக்கில் நன் கொடை வசூல் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறதே, அதைப் போக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

9-10 மணி.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, லட்சக் கணக்கில் நன்கொடை தரக்கூடியவர்கள் வேலைக்கே வர மாட்டார்கள். ஆனால் லஞ்சம் என்பதாக அல்லது குற் றச்சாட்டு என்பதாக யாராவது தகுந்தவர்கள் சான்று களோடு தருவார்களேயானால், அது பற்றி நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர நிர்வாகத்தினருக்கும், தனிப்பட்டவர் களுக்கும் இடையே ஒரு அன்டர்ஸ்டேண்டிங் இருக்குமானால், அந்தச் சூழ்நிலையில் நாம் எதுவும் செய்ய வாய்ப்பு இல்லை.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே இன்றைக்கு இளங் கலை, அறிவியல் போன்ற துறைகளில் சேர்பவர்களிடத்தில் கூட நன்கொடை வசூல் செய்கின்ற, வாங்குகின்ற ஒரு சூழ் நிலை இருக்கிறது. அத்தோடு மட்டுமல்லாமல், 30 விழுக்காடு மகளிருக்கு தனியார் மற்றும் அரசுக் கல்லூரிகளில் ஒதுக்கப் படவேண்டும் என்ற நிலை இருந்தாலும் கூட சில தனியார் கல்லூரிகளிலே அப்படிப்பட்ட அரசு ஆணை அமல்படுத்தப் படுவதில்லை, உதாரணமாக என்னுடைய தொகுதியிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : The question is irrelevant.

THIRU OSCAR C. NEGLI : All of us are aware of the misuse by some of these private Colleges. I feel that there should be representatives from the public, i.e. M.L.As. in the Governing Council. My question is would it be possible to have the MLAs as non-official representatives in the Governing Council of the private Colleges.

1991 சனவரி 24]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தத் தொகுதியிலேயிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டாலும் அந்தத் தொகுதியிலே இருக்கிற கல்வி நிலையத்திலே அவர்கள் இடம் பெற வேண்டுமென்றால் சில தொகுதிகளில் 4 கல்லூரிகள் இருக்கும்; சில தொகுதிகளில் ஒரு கல்லூரிகூட இருக்காது. எனவே இதிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள், ஒவ்வொருவர் ஒவ்வொரு இடத்திலே இடம் பெறுவது என்பதுகூட இயலாத காரியம். நடைமுறையில் சாத்தியம் இல்லாதது. அதேபோல நிர்வாகத்தினருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குமே ஒரு மாறுபட்ட கருத்து என்று ஏற்பட்டுவிட்டால் அதை எளிதில் தீர்க்க முடியாது. லயோலாக் கல்லூரி போன்ற சிறந்த கல்லூரியாக விளங்கக் கூடிய கல்லூரிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற வேண்டுமா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் சிந்திக்க வேண்டும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு கல்லூரியினுடைய ஆட்சி மன்றக்குழுவில் செயலாளராக இருக்கிறேன். இப்போது அமைச்சர் அவர்கள் கூறுவதிலிருந்து, சட்டப்படி கல்லூரி ஆட்சிக் குழுவில் மூத்த இரு பேராசிரியர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், மூத்த இரு ஆசிரியர்கள் இல்லாமல், தேர்தல் முறையில் வரவேண்டும் என்ற விதி இருக்கிறது. அதிலே பல குழப்பங்கள்—ஆசிரியர்களுக்குள்ளே ஏற்பட்டு விடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கல்லூரி ஆட்சிக் குழுவைப் பற்றியது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : இல்லை இல்லை, அது போலவே உயர்நிலைப் பள்ளிகளிலேயும் மூத்த இரு ஆசிரியர்களை மட்டும் குழுவிலே சேர்த்துக் கொள்வதற்கு சட்டத்திலே திருத்தம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவரம் என்னிடத்திலே இல்லை. பரிசீலித்துத்தான் நான் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா 8283 இப்போது எடுத்துக்கொள்ளப்படுகிறது. மற்ற வினாக்கள் சற்றுப்பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

[1991 சனவரி 24

பழங்குடியினருக்குத் தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள்.

*8283—திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்)

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

ஊட்டியில் உள்ளதுபோல் கொல்லிமலை, ஏற்காடு மற்றும் கொடைக்கானல் மலைகளிலும் பழங்குடியினருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள் திறக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊட்டியில் பழங்குடியினருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம் இல்லை. கொல்லிமலை, ஏற்காடு மற்றும் கொடைக்கானல் மலைகளிலும் பழங்குடியினருக்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள் திறந்து வைக்கும் செயற் குறிப்பு தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை. ஊட்டி யில் இருப்பது, தொழில் நேர் சிறப்பு வழி காட்டி அலுவலகம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் வேலை வாய்ப்பு அலுவலகம் இல்லை, ஆனால் தொழில் நேர் சிறப்பு வழிகாட்டி அலுவல கம் வழிகாட்டும் மையமாகச் செயல்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதைப்போன்ற மையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை இருக்கின்றன என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் கல்ராயன் மலையிலும் இயங்கி வருகிறது. ஆக இரண்டு இடங்களில்தான் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தமிழ்நாட்டிலேயே அதிகமான பழங்குடியினர் வாழ்கிறார்கள். சேந்தமங்கலம் மற்றும் ஏற்காடு இந்த இரண்டு தொகுதிகளுமே பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட தொகுதிகள். அதுமட்டும் அல்லாமல் ஆதிதிராவிட மக்கள் நிரம்ப வாழ்கிறார்கள். மொத்தம் 5 தொகுதிகள் சேலம் மாவட்டத்தில் உள்ளடங்கி இருக்கின்றன. ஆகவே அதனைக் கருத்தில் கொண்டு தொழில் நேர் சிறப்பு வழிகாட்டி அலு வலகம் சேலம் மாவட்டத்தில் ஒன்று அமைப்பதற்கு அந்தத் துறையினர் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.